1984 மாார்ச் 26]

குடும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கி மூலம் 1982-83-ல் I.R.D.P. திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை.

461—(*வினா எண். 21579)—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியின் மூலம் 1982-83-ல் I.R.D.P. திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(ஆ) 1982-83-ல் வழங்கிய குறுகிய காலக் கடன் தொகை எவ்வளவு?

(இ) இவ்வங்கியின் 1982-83-ல் லாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ரூ. 31.60 இலட்சம்.

(ஆ) ரூ. 476.67 இலட்சம்.

(இ) ரூ. 34.06 இலட்சம்.

திருமங்கலத்தில் இயங்கிடும் கூட்டுறவுத்துறை துணைப் பதிவாளர் அலுவலகத்தை உசிலம்பட்டிக்கு மாற்றும் திட்டம்.

462—*(வினா எண். 22655)—திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டியிலுள்ள கூட்டுறவுத் துணைப்பதிவாளர் அலுவலகம், திருமங்கலத்திற்கு மாற்றப்பட்டு கூட்டுறவுத் துறை துணைப்பதிவாளர் அலுவலகம் உசிலம்பட்டி இருப்பு திருமங்கலம் என்று இயங்கி வருவது உண்மையா?

(ஆ) அதை உடனடியாக உசிலம்பட்டிக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) உசிலம்பட்டியில் தகுந்த மாற்றுக் கட்டிடம் கிடைத்தவுடன் மாற்றப்படும்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்ற மகளிர் எண்ணிக்கை.

463—(*வினா எண். 16198)—திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக வேலை வாய்ப்புப் பெற்ற மகளிர் எவ்வளவு பேர்?